# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2143 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2143 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 2516 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2518 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2516 | ஏல விற்பனைகள் | 2521 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019,ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2515 - B 81563 - 5,403 (2019/09)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

ஹற்றன் முற்றவெளிக்கு 4500 எண்ணிக்கையான கொங்கிறீட் சிலீப்பர் கட்டைகள் மற்றும் நாவலப்பிட்டிய முற்றவெளிக்கு 4500 எண்ணிக்கையான கொங்கிறீட் சிலீப்பர் கட்டைகள் வழங்குவதற்கான பெறுகை

பெறுகை இலக்கம்: SRS/ F 7371

1. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் ( உயர் மட்டம்), தலைவர், ஹற்றன் முற்றவெளிக்கு 4,500 எண்ணிக்கையான கொங்கிறீட் சிலீப்பர் கட்டைகள் மற்றும் நாவலப்பிட்டிய முற்றவெளிக்கு 4,500 எண்ணிக்கையான கொங்கிறீட் சிலீப்பர் கட்டைகள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்வார் .

2. 2019.10.03 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) விலைமனுக்கள் மூடப்படும்.

3. இலங்கை, கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்து மீளச் செலுத்தப்படாத ஆவணக் கட்டணமாக ரூபா 17,300 ஐச் செலுத்தி 2019.09.10 ஆந் திகதி தொடக்கம் 2019.10.02 ஆந் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையே பொதுவான வேலைசெய்யும் நாட்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஒன்றில் பதிவுத் தாபலில் அனுப்ப வேண்டும் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை,கொழும்பு -10.

5. இலங்கை, கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் களஞ்சியங்கள் திணைக்களம், இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.-

இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகர் ,
இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களம்,
தபால் பெட்டி 1347,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11)2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr @gmail.com

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இலக்கம்.- SRS/F. 7371

9- 856

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2019.10.06 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2019, செத்தெம்பர் 11.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| இல. | வழக்கு இலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 50791/MISC/18 | EP PW-5514 | FOTON லொறி | 1 |
| 2 | AR/341/13 | EP JR-0692 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 1 |
| 3 | 53832/MT/18 | EP BEA-9925 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 4 | 52694/MT/18 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 5 | 46081/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 6 | 50335/ MT/18 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 7 | 46013/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 8 | 48521/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 9 | 47712/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 10 | 46552/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 11 | AR/460/18 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 12 | 54490/MT/18 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 13 | 43418/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 14 | 44021/PC/17 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 15 | 54442/E/18 | | சிலிண்டர் | 1 |
| 16 | 54442/E/18 | | வெற்று பரல் | 4 |
| 17 | 50857/E/18 | | சிலிண்டர் | 1 |
| 18 | 50857/E/18 | | தாச்சி | 1 |
| 19 | 50857/E/18 | | அடுப்பு | 1 |
| 20 | 50857/E/18 | | வெற்று பரல் | 1 |
| 21 | 47924/E/17 | | சிலிண்டர் | 1 |
| 22 | 47924/E/17 | | அடுப்பு | 1 |
| 23 | 47924/E/17 | | ரெகுலேட்டர் | 1 |
| 24 | 47924/E/17 | | வெற்று பரல் | 2 |
| 25 | 51517/E/18 | | வெற்று பரல் | 1 |
| 26 | 52208/E/18 | | தாச்சி | 2 |
| 27 | 53961/PC/18 | | கோடரி | 1 |
| 28 | 53961/PC/18 | | வாச்சி | 1 |
| 29 | 57997/S/19 | | சவள் | 1 |
| 30 | AR/395/19 | | இலத்திரனியல் தராசு | 1 |
| 31 | No Number | | ஜன்னல்கள் | 6 |
| 32 | No Number | | கதவு நிலை | 1 |

9-983

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - களுவாஞ்சிக்குடி

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2019.10.13 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

மேலதிக நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி.

2019, செத்தெம்பர் 09.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொடர் இல. | வழக்கு இலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 20452/MT/17 | WP MM - 4213 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 2 | 11805/PC/14 | 160-2995 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | AR/165/18 | EP BER - 0539 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4 | B/245/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |

| தொடர் இல. | வழக்கு இலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5 | B/244/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 6 | B/246/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 7 | B/249/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 8 | 21821/F/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 9 | B/250/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 10 | 11534/F/14 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 11 | 14796/MT/15 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12 | 13103/F/14 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 13 | 16481/MT/15 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14 | 9802/MT/13 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 15 | 10176/F/13 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 16 | No number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 17 | AR/635/16 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18 | 19267/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 19 | 12756/MISC/14 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 20 | 15039/PC/15 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 21 | B/280/14 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 22 | 5995/F/12 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 23 | 20453/MISC/17 | | சவள் | 01 |
| 24 | 20408/MISC/17 | | சவள் | 01 |
| 25 | 20409/MISC/17 | | சவள் | 01 |
| 26 | 20586/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 27 | 20345/MISC/17 | | சவள் | 01 |
| 28 | 20434/MISC/17 | | சவள் | 02 |
| 29 | 20434/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 30 | 19246/MISC/17 | | சவள் | 02 |
| 31 | 1926/MISC/17 | | மண்வெட்டி, சட்டி | 02 |
| 32 | 19371/MISC/17 | | சவள் | 01 |
| 33 | 19617/MISC/17 | | சவள் | 02 |
| 34 | 19606/MISC/17 | | சவள் | 02 |
| 35 | 19990/MISC/17 | | சவள் | 01 |
| 36 | 19950/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 37 | 19989/MISC/17 | | சவள் | 01 |
| 38 | 19991/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 39 | 19988/MISC/17 | | சட்டி, பானை | 02 |
| 40 | 19993/MISC/17 | | மண்வெட்டி, சட்டி | 02 |
| 41 | 19994/MISC/17 | | மண்வெட்டி, சட்டி | 02 |
| 42 | 19992/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 43 | 20260/MISC/17 | | சவள் | 01 |
| 44 | 20327/MISC/17 | | சவள் | 01 |
| 45 | 20011/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 46 | 20008/MISC/17 | | மண்வெட்டி | 01 |
| 47 | 20113/MISC/17 | | சவள் | 01 |
| 48 | 20135/MISC/17 | | சவள் | 01 |
| 49 | 20162/MISC/17 | | சவள் | 01 |
| 50 | 19240/MISC/17 | | மண்வெட்டி | 01 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுடன் ஆற்று மணல், புளுதி மணல் மற்றும் வெற்று போத்தல்கள் என்பனவும் விற்பனை செய்யப்படும்.

9-978

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## தஹ்நே லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பீவீடீ) எல்டீடி ஒருங்கிணைப்புக்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் தஹ்நே லொஜிஸ்க்டிக்ஸ் லங்கா (பீவீடீ) எல்டீடி ஆனது 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி கம்பனி பதிவு இலக்கம் பீவீ 00214727 இன் கீழ் பதிவாகியுள்ளது என இத்தால் அறிவிக்கின்றோம். மேலும் இல.116/ 10, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 07 இல் இதன் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

சேன்ரால் கோப்பரேட் அன்ட்
கன்சல்டன்சி சேவிஸஸ் (பிறைவட்) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.116/10,
றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 7.

9-786

## உறுப்பினர்களின் இறுதிக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்

### லங்கா ஓரிக்ஸ் புறொஜெக்ட் டெவலப்மெண்ட் லிமிடட் (பீபி153)

கடன் கொடுத்தோர் மற்றும் உறுப்பினர்கள் மூலமான தன்னிச்சையான கலைவு

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341(2)ஆம் பிரிவிற்கு அமைவாக மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியின் கடன்கொடுத்தோர் மற்றும் உறுப்பினர்களுக்கான இறுதிக் கூட்டமானது பின்வரும் நோக்கத்திற்காக 2019, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதியன்று இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தன மாவத்தை, ராஜகிரியவில் மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் என்பதை இதனகத்து அறியத்தருகின்றோம்.*

கூட்டத்திற்கு முன்னர் கலைதல் காலப்பகுதியில் இடம்பெறும் கலைதல் நடவடிக்கையின் செயற்பாடுகள் மற்றும் பரிவர்த்தனை தொடர்பாக ஆராய்தல்.

டபிள்யூ. டி. படகொட,
சட்டத்தரணி, கலைப்பவர்.

இல. 100/1,
ஸ்ரீ ஜயவர்தன மாவத்தை,
ராஜகிரிய.
2019, செத்தெம்பர் 27.

9-792

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் :*லெபோ மார்ட் லங்கா (பிறைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 121031
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 169/6, கெரவளப்பிட்டிய வீதி, ஹெந்தல, வத்தளை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017.03.22

கம்பனிச் செயலாளர்கள்.

9- 821

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கம்பனி கூட்டிணைப்பு அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் :* கே.வீ. பிரின்டர்ஸ் (பீவீட) எல்டீடி
*பதிவிலக்கம் :* பீவீ 00215016
*பதிவுத் திகதி:* 2019.08.30
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல.58, க்றீன் வீதி, கொழும்பு 13

கம்பனிச் செயலாளர்.

9-831

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது .-*

*கம்பனியின் பெயர் :* ஒய்ஸ்டடன் (பீவீட) எல்டீடி
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2019.07.23
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 00213884
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* 244/2A, கோனகேன ,கடவத

கபடாகே உதாற லக்மால் குணசேன,
கம்பனிச் செயலாளர்.

244/2A, கோனகேன,
கடவத.

9-858

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் வரும் நிறுவனம் பதிவுசெய்யப்பட்டதற்கான அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் :* பெக் ஒல் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட இல.:* பீவீ 00214702
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல.61, ஆனியாகந்த வத்தை, நாகொட, கந்தானை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2019, ஒகத்து 22

கம்பனிச் செயலாளர்.

9-917

---

## அறிவித்தல்

*2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் , கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது . -*

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.03.31
*கம்பனியின் முன்னைய பெயர் :*இன்ஃபோர் மீடியா (பிறைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 85254
*கம்பனியின் புதிய பெயர் :* ஒப்சர்வர் ஜொப்ஸ் ( பிறைவட்) லிமிட்டட்
*பதிவு அலுவலகம்:* இல.35, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு -10

கம்பனிச் செயலாளர்.

9- 941

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ராகம, வெளிசர, எலபிட்டியவல வீட்டு வளாகம், இல. B/3/2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கஸ்தூரி அச்சில்லாகே அனூஷா ப்ரியங்க ஜயதிலக்க ஆகிய நான், என்னால் ராகம, வெளிசர, எலபிட்டிவல வீட்டு வளாகம், இல. B/3/2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பலாபுவடுகே டெமஷின் யஸ்மின் நிமாலி ஜயதிலக என்பவருக்கு வழங்கப்பட்டதும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய சீ. சிரிமெவன் விஜேசேகர முகதாவில் 2004 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01ஆந் திகதியன்று நிறைவேற்றப்பட்டதுமான 96 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித்தத்துவப் பத்திரத்தை அழித்து வெற்றும் வெறிதுமாக்கி இரத்துச் செய்துவிட்டேன் என்றும் இதன் பின்பு எனது சார்பில் குறித்த பலாபுவடுகே டெமஷின் யஸ்மின் நிமாலி ஜயதிலக என்பவருடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பல்ல என்றும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கஸ்தூரி அச்சில்லாகே அனூஷா ப்ரியங்க ஜயதிலக்க .

9- 825

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் அறியத்தருவது இல. 123 கொண்ட 2006.02.14 ஆந் திகதி இடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு யசமாலி எஸ். சமரசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பன்னிப்பிட்டிய கி/எரவ்வல, இல. 260/ 2, மைத்திரி மாவத்தையில் வசிக்கும் பண்டிதவிதான சனத் பிரசாத் குணவர்த்தன என்பவரால் பன்னிப்பிட்டிய கி/எரவ்வல, இல. 260/2, மைத்திரி மாவத்தையில் வசிக்கும் லியனபடபெதிகே அச்சலா மங்கலிகா குணவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் உடனடியாக செல்லுபடி அற்றதாக இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன். மேலும், என் நிமித்தம் இதுகால வரையிலும் செயலாற்றிய பன்னிப்பிட்டிய கி/ எரவ்வல , இல. 260/2, மைத்திரி மாவத்தையில் வசிக்கும் லியனபடபெதிகே அச்சலா மங்கலிகா குணவர்தன என்பவருடன் எவரொருவரும் செய்துகொள்ளும் காரியங்களுக்கோ அவரால் கையெழுத்திடப் படும் எந்தவொரு பத்திரங்களுக்கோ நான் பொறுப்புதாரி அல்ல என்பதையும் அவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2019.09.04 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றேன்.

பண்டிதவிதான சனத் பிரசாத் குணவர்த்தன.

9- 844

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

முன்னர் , இலங்கை, காலி, தேவசுரேந்திர பிளேஸ், இல. 32/1 தற்போது அவுஸ்திரேலியா , குயின்ஸ்லாந்து 4170, கனோன் ஹில், த.பெ.இல. 50 இல் வசிக்கும் ரனசிங்ஹ வாசல முதியன்சேலாகே ரமணி குமாரி கான்சனமாலா ரனசிங்ஹ ( இலங்கை கடவுச் சீட்டு இலக்கம் 1775178 ஆகிய நான், கண்டி டி. எஸ். சேனானாயக்க வீதி, இலக்கம் 256 இல் வசிக்கும் தமயந்தி வஜிரா வேரபிட்டிய (தே.அ.அ.இல. 548453461 V) அவர்களை எனது உண்மையான மற்றும் சட்டரீதியான அற்றோணியாக நியமித்து பிரசித்த நொத்தாரிசு சீ. அமரசேகர முகதாவினால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட 4526 ஆம் இலக்க மற்றும் 2012.01.05 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவத்தினை 2019, செத்தெம்பர் மாதம் 05 ஆகிய இன்றைய திகதியிலிருந்து இரத்துச் செய்வதாகவும் இதனகத்துப் பின்னர் 4526 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினை பாவித்து அவர் செய்யும் எத்தகைய செயல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

ரனசிங்ஹ வாசல முதியன்சேலாகே ரமணி
குமாரி கான்சனமாலா ரனசிங்ஹ.

9-901

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலருமறிக, பொலன்னறுவை, ஜயந்திபுர, பெந்திவெவ, இல. 13, நூரல் டெவலொப்மென்ட் புரஜெக்ட் ( கம் புளுல் கிரிம வியாபார்த்திய) இல் வசிக்கும் அபரண தேவலாகே காமினி சிசிர அபேரத்ன (தே.அ.அ.இல. 761753665V) ஆகிய என்னால் எனது சார்பில் 2016.12.16 ஆந் திகதியன்று பிரசித்த நொத்தாரிசு ஓ.எஸ். எம். ஏ. காதர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016.12.23 ஆந் திகதியன்று கிழக்குப் பிராந்திய உதவி பதிவாளர் நாயகம் மட்டக்களப்பில் தொடர் இல. 915, இருமடி (folio) இல. 39, தொகுதி (volume) இல.24இல் பதியப்பட்ட இல. 297, விசேட அற்றோணித்தத்துவமானது எனது சார்பில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துப்பரவுப் பணியினை பராமரிப்பதற்கு இல. 89/1, பழைய காத்தான்குடி வீதி, கல்லடி, உப்போடை, மட்டக்களப்பில் வசிக்கும் இராசசிங்கம் தேவராசா (தே.அ.அ.இல. 722161807V) என்பவர் சட்டபூர்வ அற்றோணியாக நியமிக்கப்பட்டிருந்தார். ஆகவே நான் எனது சுய நினைவுடன் அறியத்தருவதாவது மேற்கூறப்பட்ட அற்றோணித்தத் துவப்பத்திரத்தை இரத்துச் செய்வதுடன், அவ்அற்றோணி தத்துவப் பத்திரத்திரத்தில் இராசசிங்கம் தேவராசா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அதிகாரங்களை முடிவுறுத்திக் கொள்கின்றேன்.

அபரண தேவலாகே காமினி சிசிர அபேரத்ன.

2019, ஓகத்து 02.

9-939

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பண்டாரகம, ரேருகான சமரநாயக்கபுர, இல. 22 எனும் முகவரியில் வசிக்கும் கும்புக்ககே நாலனீ புஸ்பகாந்தி ( தே.அ.அ.இல. 737742024V) ஆகிய நான், சவூதி அரேபியா ரியாதில் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு அற்றோணித் தத்துவத்தினால் பண்டாரகம, கொதலாவல நாமலுவ வீதி, இல. 1 எனும் முகவரியில் வசிக்கும் மதிராவலகே திலக் அறவிந்த பெரேரா ( தே.அ.அ.இல. 753361960V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை 2019. 08.27 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்குக் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நன் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

கும்புக்ககே நாலனீ புஸ்பகாந்தி .

9-980

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கையில், உக்குவெல, குருக்கெட்ட, இல. 72 ஐச் சேர்ந்த மொஹமட் நஜீப்டீன் , மொஹமட் அலி அஹமட் ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் சம்பந்தப்படும் அனைவருக்கும் அறிவித்துக் கொள்வதாவது, மேற்படி மொஹமட் நஜீப்டீன் மொஹமட் அலி அஹமட் ஆகிய நான், மாத்தறை பிரசித்த நொத்தாரிசு திருமதி ஸிட்டி பாஸினா ஹிஸாத் நபீல் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு , தாஹிர் மொஹமட் நுஹுமான் ரபீக் இற்கு என்னால் வழங்கப்பட்ட 2015. 08.07 ஆந் திகதியிடப்பட்ட 17299 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து மற்றும் இல்லாதொழித்துள்ளேன்.

எம்.என். எம். அலி அஹமட்.

9-998

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

எனது சேவைபெறுநரான ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், கெப்பட்டிபொல , களுபுளுலந்த , வலிவள, "சந்துனி" எனும் முகவரியில் வசிக்கும் விக்கிரம ஆரச்சிலாகே வீரசிங்ஹ (தே.அ.அ.இல. 632842325V) என்பவரினால் நுவரெலிய பிரசித்த நொத்தாரிசு செல்வி இராஜகோபால் ஜனனி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 01 மற்றும் 2017. 03.06 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் நுவரெலியா கலேகால இல. 39/30 எனும் முகவரியில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்சேலாகே உதயங்கனீ ரத்நாயக்க என்பவருக்கு மேற்படி அற்றோணித் தத்துவத்தின் விசேட காரியங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துத் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவக்காரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு எனது சேவை பெறுநர் பொறுப்பாளியல்ல என்று சேவை பெறுநரின் ஆலோசனையின் படி இத்தால் தெரிவிக்கின்றேன்.

அற்றோணி அதிபரின் சட்டத்தரணி .

9-1002

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சக்குரா இன்ட்டர்நெஷனல்
கணக்கு இல.: 0084 1000 1595

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.30 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.16 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்து நாநூற்று ஐம்பத்தி இரண்டு ரூபா ஐந்து சதம் (ரூபா 2,07,50,452.05) 2019, மே 22 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே தொண்ணூற்றி இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 1,92,50,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு வீதம் (16%)வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட இல. 2256 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரரான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக 2019.10.23ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லே பத்துவின் மொரட்டுவை மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் உயன பிரதேச செயலாளர் பிரிவின் உயன மேற்கு இல. 552A கிராம அலுவலர் பிரிவின் உயனையில் அமைந்த லேடி டி சொய்சா டிரைவ் வரிமதிப்பீட்டு இல. 32 ஐ ஏற்ற "வெட்டகெய்யாகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. எப். டபிள்யூ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 450 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: சாகர ஒழுங்கை 5 (இல. 31 எனும் வரைபடத்தில் அமைந்த லொட் 8); கிழக்கு : வீதி (இல. 1551 எனும் வரைபடத்தில் அமைந்த லொட் 3சீ மற்றும் இல. 1551 எனும் வரைபடத்தில் அமைந்த லொட் 3பி); தெற்கு: பீ. எச். சீ. டி. சில்வா என்பவரின் வாரிசுகளின் சொத்து மற்றும் மேற்கு: லேடி. டி. சொய்சா டிரைவ், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு தசம் இரண்டு சைபர் பேர்ச் (0ஏ. 0று. 27.20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 450 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 மிகத் திருத்தமாக கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

மேற்கூறப்பட்ட உயனையில் அமைந்த ''வெட்ட செய்யாகாஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. டபிள்யூ. ரொட்றிகோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1990, யூன் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 589 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வீதி (சாகர ஒழுங்கை 5); கிழக்கு : பார்ட்டி சொய்சாவின் சொத்து; தெற்கு : பீ. ஏ. சீ. டி. சில்வாவின் சொத்து மற்றும் மேற்கு: வீதி (லேடி . டி. சொய்சா டிரைவ்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு தசம் இரண்டு சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 27.20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 589 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்த - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 239/02 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9- 947/1

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

பீ .கே.டபிள்யூ. டபிள்யூ. எம். காமினி பண்டா
கணக்கு இல.: 0025 5002 5054

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.30 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.16 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான மூன்று கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றி நாற்பத்தி ஏழு ரூபா இருபது சதம் (ரூபா 3,60,33,847.20) 2019, மே 23 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே நாற்பத்தி ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 3,47,50,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட இலக்கங்கள் 10150, 11077, 1689, 862, 735, 1277, 3818 மற்றும் 2287 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக இல. 345 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 4, 5, 6, 2019.10.28 ஆந் திகதி பி.ப. 3.00 மணிமுதல் மற்றும் இல. 615 எனும் வரைபடத்தில் லொட் 1 , 2019.10.29 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த தும்பர பல்லெகம்பாஹாவின் பாஹாத்த தும்பர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் அலுத்கம கிராம அலுவலர் பிரிவின் அலுத்கமையில் அமைந்த ''பொக்குனெகொட வத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எம். எஸ்.எம். பீ. வீஜேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, ஒற்றோபர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 345 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : துன்கந்துர முதல் குடுகல வீதி வரையான கி. ச. வீதி ; கிழக்கு: பொக்குனெகொட வத்த முன்னர் புஞ்சி மெனிக்காவின் காணி தற்போது பீ. டபிள்யூ. டபிள்யூ. எம். புஞ்சிபண்டாவின் காணி; தெற்கு : லொட் 6 மற்றும் மேற்கு : லொட் 4, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஐந்து தசம் ஒரு பேர்ச் (0ஏ. 1றூ. 5.1பே.) அல்லது சைபர் தசம் ஒன்று ஒன்று நான்கு சைபர் ஹெக்டேயர் (0.1140 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 345 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் எல் 26/131 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த தும்பர பல்லெகம்பாஹாவின் பாஹாத்த தும்பர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் அலுத்கம கிராம அலுவலர் பிரிவின் அலுத்கமையில் அமைந்த ''பொக்குனெகொட வத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எம். எஸ். எம். பீ. விஜேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, ஒற்றோபர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 345 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 6 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட்கள் 2, 3, 4, 5 மற்றும் பொக்குனெகொட வத்த முன்னர் புஞ்சி மெனிக்காவின் காணி தற்போது பீ. டப்ள்யூ. டபிள்யூ. எம். புஞ்சிபண்டாவின் காணி; கிழக்கு: டிங்கிரிராலகெ வத்த; தெற்கு: வீதி மற்றும் மேற்கு : வீதி மற்றும் லொட் 7 முன்னர் சைமனின் காணி தற்போது ஆர். ஜீ. தயாவத்தி மற்றும் ஏனையோரின் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று ஏக்கர்கள் மற்றும் முப்பத்தி இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 32பே.) அல்லது ஒன்று தசம்

இரண்டு ஒன்பது ஐந்து சைபர் ஹெக்டேயர் (1.2950 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 345 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L 26/132 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

மேற் கூறப்பட்ட இல. 345 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4 (மிகத் திருத்தமாக) என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : கி. ச. வீதி; கிழக்கு : லொட் 5; தெற்கு : லொட் 6 மற்றும் மேற்கு: லொட்கள் 2 மற்றும் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்மூன்று தசம் எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 13.8பே.) அல்லது சைபர் தசம் மூன்று ஐந்து சைபர் ஹெக்டேயர் (0.0350 ஹெக்.) கூறப்பட்ட இல. 345 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L26/134 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 10150, 11077, 1689, 862, 735, 1277 மற்றும் 3818 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணம், மொணறாகலை மாவட்டம், வெள்ளவாய கோரலே வெள்ளவாய பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் நுகயாய கிராம அலுவலர் பிரிவில் பத்தல ஆரகமையில் அமைந்த "பத்தலஆர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ரூப்பசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, செத்தெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 1869 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : ஏ. கே. உப்பதிஸ்ஸ உரிமம் கோரும் காணி; கிழக்கு : எம். ஹனீஃப்பா உரிமம் கோரும் காணி ; தெற்கு : வீதிக்கான ஒதுக்கம் மற்றும் மேற்கு: டீ. எம். பிரேமதாச உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் மற்றும் எட்டு பேர்ச் (0ஏ. 3றூ. 8பே.) அல்லது சைபர் தசம் மூன்று இரண்டு மூன்று ஏழு ஒன்று ஹெக்டயார் (0.32371 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1869 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட பத்தல ஆரகமையில் அமைந்த "பத்தல ஆர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ரூப்பசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, பெப்புருவரி 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 615 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : ஏ. கே. உப்பதிஸ்ஸ உரிமம் கோரும் காணி; கிழக்கு : எம். ஹனீஃப்பா உரிமம் கோரும் காணி ; தெற்கு: வீதிக்கான ஒதுக்கம் மற்றும் மேற்கு : டீ. எம். பிரேமதாச உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் மற்றும் எட்டு பேர்ச் (0ஏ.3றூ. 8பே.) அல்லது சைபர் தசம் மூன்று இரண்டு மூன்று ஏழு ஒன்று ஹெக்டயார் (0.32371 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 615 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணறாகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO/P19/42 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9- 947/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கே.வீ. ஜீ. டீ. வீரசிங்ஹ மற்றும் கே. ஏ.ஏ. என். வீரசிங்ஹ
கணக்கு இல.: 0184 5000 1429

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.04.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.06.21 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.19 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்தி மூன்று ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் (ரூபா 1,05,64,353.95) 2019, மாச்சு 18 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தாறு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூபா 56,75,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%) மேலும் நாற்பத்தைந்து இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூறு ரூபா (ரூபா 45,32,800.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்டஇலக்கங்கள் 365, 777, 1132, 1327, 1493 மற்றும் 2704 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2019.10.28ஆந் திகதி மு.ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரளே பாத்த தும்பரையின் குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கல்அமுன - இல. 713 கிராம அலுவலர் பிரிவின் ஹுரிகடுவ மெதிகேயில் அமைந்த, வரிமதிப்பீட்டு இல. 45 ஐ ஏற்ற ''தம்மகொட்டுவெவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஏப்பிறல் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 128/01/02 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: பிரதேச சபை வீதி; கிழக்கு மற்றும் தென்கிழக்கு : இல. 3595 எனும் வரைபடத்தில் லொட் 2 ; தெற்கு மற்றும் தென் மேற்கு: கடுபோகாஹாமுல ஹேனையை பிரிக்கும் இயற்கை வேலி மற்றும் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தைந்து பேர்ச் (00ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 128/01/02 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 மீள் அளவீடு செய்யப்பட்டு கீழ்க் கண்டவாறு நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ஹுரிகடுவ மெதிகேயில் அமைந்த, "தம்மகொட்டுவெவத்த" என்றழைக்கப்படும காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். சீ. ஓ. டி. லா மோட்டே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1968, யூலை 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 3595 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கி. ச. வீதி ; கிழக்கு மற்றும் தென்கிழக்கு: லொட் 2 (இதே காணியின் எஞ்சிய பகுதி) ; தெற்கு : தவறுதலாக வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும்; தென்மேற்கு : கடுபோகாஹாமுல ஹேனையை பிரிக்கும் இயற்கை வேலி மற்றும் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தைந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3595 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D 146/ 09 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9- 947/3

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஆர். எம். ரீ. ஏ. பீ. ரத்நாயக்க மற்றும் கே. ஏக்கநாயக்க
கணக்கு இல.: 0080 5001 1284

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.30 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.16 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபத்தி இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து ஐந்நூற்று அறுபத்தியொரு ரூபா அறுபத்தி நான்கு சதம் (ரூபா 62,11,561.64) 2019, மே 23 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபது இலட்சம் ரூபா (ரூபா 60,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2531 மற்றும் 2756 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2019.10.28ஆந் திகதி பி .ப. 1.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்தஹேவாஹெட்ட கந்தாஹாய கோரலே கங்கவட்ட கோரலேயின், கங்கவட்ட கோரலே கண்டி நான்கு கிரவேற்கள் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் தென்னெகும்புர கிராம அலுவலர் பிரிவின் தென்னெ கும்புரவில் அமைந்த, பிந்தாவலிய வீதி இல. 154/9/8 ஐ ஏற்ற "பிந்தாலிய வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். டபிள்யூ. எம் வீரகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, மே 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 17983 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 (லொட் 1 என தவறுதலாக பதிவு செய்யப்பட்டு மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஏக்கநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 4074 எனும் உறுதியினூடாக திருத்தப்பட்ட) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு மற்றும் வடகிழக்கு : வயலின் ஓரம்;கிழக்கு: ஆறு; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ஓ. என். கே. பெர்னாண்டோ இல. 76 எனும் வரைபடத்தின் லொட் 4 என்பவரால் தயாரிக்கப்பட்ட மற்றும் மேற்கு:

லொட்கள் 3 மற்றும் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்படட இல. 17983 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஏ 651/133 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2018, ஒகத்து 31 ஆந் திகதி இல. 17983 எனும் வரைபடத்தில் வைக்கப்பட்ட அவரின் குறிப்பின் பிரகாரம் மேற்கூறப்பட்டதற்கு கூறப்பட்ட மேலதிகமாக பொது பிரவேசம் என கூறப்பட்ட நில அளவையாளர் உறுதிப்படுத்துகின்றார்) உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எஸ். பீ. விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, ஏப்பிறல் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 5092 எனும் வெளிப்படை உறுதி மற்றும் பகிரங்க நொத்தாரிசு சீ. ஜே. அத்தபத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, யூலை 22 ஆந் திகதியிடப்பட்ட இல. 679 ஐ ஏற்ற பறிமாற்றப் பத்திரத்தின் மீது மற்றும் அதன் கீழ் உரிமை கோரும் லொட் 3 என குறிப்பிடப்பட்ட வீதியின் உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-947/4

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எஸ். எம்.கே.ஜீ.பீ.எம்.சமரகோன் மற்றும் எஸ். எம். கே. ஜீ. ஏ. எஸ். சமரகோன்
கணக்கு இல.: 1085 5460 6048

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.09.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.09.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.26 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து ஆராயிரத்து முந்நூற்று பதின் மூன்று ரூபா முப்பத்தி ஒன்பது சதம் (ரூபா 4,62,06,313.39) 2019, மே 02 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே இருபத்தி எட்டு இலட்சம் ரூபா (ரூபா 3,28,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு வீதம் (16%) மேலும் எழுபத்தி இரண்டு இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து நாநூற்று எண்பது ரூபா இரண்டு சதம் (ரூபா72,81,480.02) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் முப்பத்தி ஆறு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து நாநூற்று இருபத்தி ஒன்பது ரூபா எண்பது சதம் (ரூபா 36,43,429.80) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரெண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 779, 1590, 2714 மற்றும் 2710 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2019.10.28ஆந் திகதி இல. 1524 எனும் வரைபடத்தின் லொட் 01, மு.ப.11.00 மணிமுதல் மற்றும் இல. 3611 எனும் வரைபடத்தின் லொட் 01 மு .ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த தும்பர உடகம்பஹா கோரலே குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் இஹலவெல இல. 701, கிராம அலுவலர் பிரிவின் கெங்கல்லை கிராமத்தில் அமைந்த "கொளொன்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. ஜே. ஏ. அமரசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, சனவரி 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 1524ஆம் எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: இல. 743 ஆம் எனும் வரைபடத்தின் லொட் 1; கிழக்கு: கல்லிந்தவத்த முதல் தெல்தெனிய - கண்டி பிரதான வீதி வரையான வீதி (பி. ச); தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். அபேசுந்தர என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1657 எனும் வரைபடத்தின் லொட் 1; மேற்கு: இல. 1144 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் அகழை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஏழு தசம் மூன்று பேர்ச் (00ஏ. 01றூ. 7.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1524 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 228/63 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 779, 1590 மற்றும் 2714 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த தும்பர பேலிஸ் பத்து மேற்கு கோரலே குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கோனவெல வடக்கு கிராம அலுவலர் பிரிவின் கோனவலையில் அமைந்த தெல்தெனிய வீதி, திகன வரிமதிப்பீட்டு இல. 572 ஐ ஏற்ற ''கட்டுஹேன'' என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஈ. வீ. சிறிசுமன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 6350 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2 இன் பிரிக்கப்பட்ட துண்டான) உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். பீ. டீ. வேத்தேவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, மே 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 3611 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து

எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு: பீரிஸ் மற்றும் ஏனையோருக்கு சொந்தமான காணி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. பீ. எம். எம். கதிரகே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 609/1997 எனும் வரைபடத்தின் லொட் 1); கிழக்கு: பீரிஸ் மற்றும் ஏனையோருக்கு சொந்தமான காணி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. பீ. எம். எம். கதிரகே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 609/1997 எனும் வரைபடத்தின் லொட் 1); தெற்கு: கண்டி – கரலியத்த பிரதான வீதி முதல் விக்டோரியா மலைத்தொடர்; மேற்கு: பகுதி இல. 6350 எனும் வரைபடத்தின் லொட் 2 எஞ்சிய பகுதியின் ஒரு பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச் (00ஏ. 00றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3611 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 228/62 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல.2710 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-947/5

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ரன்பூமி ஃபாட்டிலைச (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0085 1000 0650

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.23 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.13 ஆந் திகதிய “திவயின” (Divaina), “ஐலண்ட்” (Island), “தினக் குரல்”(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து எழுபத்துநான்காயிரத்து முந்நூற்றிருபத்தொரு ரூபா அறுபத்தேழு சதம்(ரூ. 4,41,74,321.67) 2019, மே 07 ஆந்திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே அறுபத்தாறு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூறு ரூபா (ரூ. 3,66,90,800.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1972 மற்றும் 2407 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்றஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2019.10.25ஆந் திகதி மு .ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கின் கம்பஹாசீய பத்துவின் மாத்தளை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மடவல உல்பொத்த E322C கிராம அலுவலர் பிரிவின் மடவல உள்பொத்தையில் அமைந்த “மடவல உள்பொத்த எஸ்ட்டேட்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். என். எஸ். ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, மாச்சு 16 மற்றும் 18 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 2008 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; கிழக்கு : ML/2 எனும் வரைபடத்தில் லொட் 2 அதே காணியின் ஒரு பகுதியாகவுள்ளது ; தெற்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; மற்றும் மேற்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது. ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு ஏக்கர்கள் ஒரு றூட் மற்றும் நான்கு பேர்ச்சுகள் (12ஏ. 1றூ. 4பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2008 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 222/136 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கின் கம்பஹாசீய பத்துவின் மாத்தளை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மடவல உல்பொத்த E322C கிராம அலுவலர் பிரிவின் மடவல உள்பொத்தையில் அமைந்த “ மடவல உள்பொத்த எஸ்ட்டேட்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். என். எஸ். ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, மாச்சு 16 மற்றும் 18 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 2008 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; கிழக்கு: ML/2 எனும் வரைபடத்தில் லொட்கள் 2 மற்றும் 12 அதே காணியின் ஒரு பகுதியாகவுள்ளது ; தெற்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; மற்றும் மேற்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர்கள் மற்றும் முப்பத்துநான்கு பேர்ச்சுகள் (2ஏ. 0றூ. 34பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2008 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 222/137 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கின் கம்பாஹாசிய பத்துவின் மாத்தளை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மடவல உல்பொத்த E322C கிராம அலுவலர் பிரிவின் மடவல உள்பொத்தையில் அமைந்த " மடவல உள்பொத்த எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். என். எஸ். ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, மாச்சு 16 மற்றும் 18 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 2008 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; கிழக்கு : ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; தெற்கு : இல. ML/2 எனும் வரைபடத்தில் லொட் 12 வீதியாக உள்ளது ; மற்றும் மேற்கு : குருநாகல் எஸ்ட்டேட். இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஐந்து ஏக்கர்கள் ஒரு றூட் மற்றும் முப்பத்துநான்கு பேர்ச்சுகள் (5ஏ. 1றூ. 34பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2008 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 222/138 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9 - 947/6

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

அநுர எண்டப்பிரைசார்ஸ்
கணக்கு இல.: 0113 1000 0444

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.30 ஆந்திகதிய இலங்கை வர்த்த மானியிலும் (Gazette) 2019.08.16 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சத்து முப்பத்தி மூவாயிரத்து முந்நூற்று தொண் ணூற்றி எட்டு ரூபா எண்பது சதம் (ரூபா 4,49,33,398.80) 2019, மே 29 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே பதின் ஆறு இலட்சத்து அறுபத்தி மூவாயிரத்து எழுநூற்று ஐம்பத்தி நான்கு ரூபா முப்பத்தி ஒரு சதம் (ரூபா 3,16,63,754.31) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஐந்து வீதம் (10.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1021 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2019.10.24 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

1. ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவின் - ரிலபொல கோரலே பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் பதுளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் உடவெல - 80டி கிராம அலுவலர் பிரிவின் வெதிகுனே கிராமத்தில் அமைந்த "கொளன் காஹாஹேனகும்புர, கொளொன் காஹாஹேன, கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு (2014, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட கூறப்பட்ட நிலஅளவையாளரினால் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு) உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். பீ. பீ. திசாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, மாச்சு 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 1351 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 33 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட்கள் 32, 30 மற்றும் 29; கிழக்கு : லொட்கள் 29 மற்றும் 34; தெற்கு : லொட்கள் 34 மற்றும் 35 மற்றும் மேற்கு : லொட் 35 மற்றும் திஸ்ஸ பஸ்நாயக்கவின் தோட்டம் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1351 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

2. கூறப்பட்ட வெதிகுனே கிராமத்தில் அமைந்த "கொளன் காஹாஹேனகும்புர, கொளொன் காஹாஹேன, கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த" இல. 1351 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 34 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட்கள் 33 மற்றும் 29; கிழக்கு: லொட்கள் 29, 26 மற்றும் 36, 35 ; தெற்கு : லொட்கள் 36மற்றும் 35 மற்றும்; மேற்கு : லொட் 35 மற்றும் 33 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1351 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

3. கூறப்பட்ட வெதிகுனே கிராமத்தில் அமைந்த "கொளன் காஹாஹேனகும்புர, கொளொன் காஹாஹேன, கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த" இல. 1351 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள்

நிர்ணயிக்கப்பட்டு லொட் 35 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : திஸ்ஸ பஸ்நாயக்கவின் தோட்டம் மற்றும் லொட் 33; கிழக்கு : லொட்கள் 33, 34 மற்றும் 36; தெற்கு: லொட்கள் 36, 37 மற்றும் வீதி (H) மற்றும் மேற்கு : வீதி (H) மற்றும் திஸ்ஸ பஸ்நாயக்கவின் தோட்டம் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி நான்கு தசம் ஐந்து ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 34.56பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1351 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

வீதிக்கு பிரவேசிப்பதற்காக குறிப்பிடப்பட்ட அனைத்து காணித் துண்டுகளின் ஊடாக மற்றும் அதன் மீது பிரவேசிப்பதற்கான மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.

கூறப்பட்ட லொட்கள் 33, 34 மற்றும் 35 இல. 1361 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 1 மற்றும் இல. 475 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 1 எனக் காட்டப்பட்ட காணிகளின் உப பிரிவும் மற்றும் மீள் அளவீடு செய்யப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டதுடன் அது கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது:

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவின் - ரிலபொல கோரளே பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் பதுளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் உடவெல - 80 டி கிராம அலுவலர் பிரிவின் வெதிகுனே கிராமத்தில் அமைந்த ''கொளன்காஹாஹேன கும்புர, கொளொன்காஹாஹேன, கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். பீ. பீ. திசாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, பெப்புருவரி 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 475 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: திஸ்ஸ பஸ்நாயக்கவின் தோட்டம் மற்றும் எம். கெகுலவல என்பவர் உரிமம் கோரும் தேயிலைத் தோட்டம்; கிழக்கு : எம். கெகுலவல என்பவர் உரிமம் கோரும் தேயிலைத் தோட்டம்; தெற்கு : எஸ் அல்மேதாவின் காணி மற்றும் மேற்கு : வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்தி ஐந்து பேர்ச் (0ஏ. 2r. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 475 எனும் வரைபடத்திற்கு அமைவாக பதுளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 164/18 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட வெதிகுனே கிராமத்தில் அமைந்த ''கொளன்காஹாஹேனகும்புர, கொளொன்காஹாஹேன, கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். பீ. பீ. திசாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஏப்பிறல் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 1361 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி; கிழக்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் எஸ். அல்மேதாவின் தோட்டம்; தெற்கு : எஸ் அல்மேதாவின் காணி மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். பீ. பீ. திசாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 475 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 மற்றும் மேற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். பீ. பீ. திசாநாயக்க என்வரால் தயாரிக்கப்பட்ட இல. 475 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1, ரீ. பஸ்நாயக்கவின் தோட்டம் மற்றும் இதே காணியின் எஞ்சிய பகுதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஒன்று தசம் எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 1.8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1361 எனும் வரைபடத்திற்கு அமைவாக பதுளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 164/19 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9- 947/7

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பென் கொன்சோடியம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0120 1000 0929

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.04.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.09.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.26 ஆந் திகதிய ''திவயின'' (Divaina), ''தினக் குரல்''(Thinakkural) மற்றும் ''ஐலண்ட்'' (Island) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினேழு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து தொளாயிரத்து நாற்பது ரூபா எண்பது சதம் (ரூபா 17,34,12,940.80) 2019, ஏப்பிறல் 05 ஆந்திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதினைந்து கோடி ரூபா (ரூபா 15,00,00,000.00) at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஏழு ஐந்து வீதம் (2.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2064 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2019.10.28 ஆந் திகதி

மு.ப. 11.45 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பத்துவையின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் வெள்ளவத்தை தெற்கு கிராம அலுவலர் பிரிவின் கொழும்பு நிர்வாகப் பிரிவில் அமைந்த வோட் இல. 47 வெள்ளவத்தை தெற்கு பொஸ்வெல் இடத்தின் ஊடாக அமைந்த மொஸ்வெல் இடம் வரிமதிப்பீட்டு இல. 35 ஐ ஏற்ற ''மாஹாவெள்ளவத்தை'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். நடராஜா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒகத்து 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 1664 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் A ; கிழக்கு: பொஸ்வெல் இடம், வரிமதிப்பீட்டு இல. 33 ஐ ஏற்ற லொட் 3612, முவார்ஸ் வீதி, வரிமதிப்பீட்டு இல. 42 ஐ ஏற்ற லொட் X5 ; தெற்கு : முவர்ஸ் வீதி முறையே வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 46, 48 மற்றும் 50 ஐ ஏற்ற முறையே லொட் இலக்கங்கள் X4b3, X4b2 மற்றும் X4b1 மற்றும் மேற்கு: முவார்ஸ் வீதி, வரிமதிப்பீட்டு இல. 52 ஐ ஏற்ற லொட் 3354 மற்றும் பொஸ்வெல் இடம், வரிமதிப்பீட்டு இல. 37A ஐ ஏற்ற லொட் 2481 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் நான்கு தசம் மூன்று சைபர் பேர்ச் (0ஏ. 1றூ. 4.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1664 எனும் வரைபடத்திற்கு அமைவாக பாணந்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் SPE 89/118 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இல. 1664 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் A இன் ஊடாகவும் அதன் மீதும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-949

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பென் கொன்சோடியம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0120 1000 1712

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.02 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.09.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.26 ஆந் திகதிய “திவயின” (Divaina), “தினக் குரல்”(Thinakkural) மற்றும் 2019.08.30 ஆந் திகதி “ஐலண்ட்” (Island) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐம்பத்தி எட்டு கோடியே பதினான்கு இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து பன்னிரெண்டு ரூபா பத்து சதம் (ரூபா 58,14,47,012.10) 2019, ஏப்பிறல் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தி ஐந்து கோடி ரூபா (ரூபா 55,00,00,000.00) at the rae of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஏழு ஐந்து வீதம் (2.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2244 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2019.10.28 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் பாமன்கட மேற்கு, கிராம அலுவலர் பிரிவின் வோட் இல. 46, பாமன்கடை மேற்கில் அமைந்த ராஜகுரு ஸ்ரீ சுபோதி வீதி (முன்னர் கெனல் பேங்க் வீதி) 37 ஆவது ஒழுங்கையினூடாக 37 ஆவது ஒழுங்கையில் அமைந்த வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 89 மற்றும் 93 (முன்னர் வரி மதிப்பீட்டு இல. 89) ஐ ஏற்ற “ நுககாஹாவத்த” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். நடராஜா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, சனவரி 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 1890 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : கெனல் பேங்க் வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 71 மற்றும் 71 1/1 ; கிழக்கு : ராஜகுரு ஸ்ரீ சுபோதி வீதி (முன்னர் கெனல் பேங்க் வீதி) ; தெற்கு : 37 ஆவது ஒழுங்கை மற்றும் மேற்கு : லொட்கள் 1345 மற்றும் 1344 முறையே 37 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இலக்கங்கள், 87 மற்றும் 83/7 ஐ ஏற்ற வளவுகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்தொன்பது தசம் மூன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 19.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1890 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் SPE 92/120 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஈ. பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1951, மே 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 295 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 277B2 இன் ஊடாகவும் அதன் மீதும் அதன் கீழும்

பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-948

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல.: 81605808

கொச்சிக்கடை, பல்லன்சேன வடக்கு, இல. 88/2 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மில்லாவ தந்திரிகே சுஜித பிரியந்த அப்புஹாமி மற்றும் திருமதி மதகமகே வஜிர பெர்ணான்டோ ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.09ஆந் திகதிய 2136 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.07.26 ஆந் திகதி ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹாரா மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2019.11.28ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் பல்லன்சேன கிராம அலுவலர் பிரிவின் பல்லன்சேன கிராமத்தில் அமைந்த "கதுருகஹவத்த , கஹட்டகஹவத்த மற்றும் கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பலேந்திரன் மீளளவை செய்து 06.02.2010 ஆந் திகதியிட்ட வரைபட இல. 16/3/2010 இல் பிரிவு துண்டு 1) உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். ரீ. சுமுது டீ பெரேரா தயாரித்த 15.02.2017 ஆந் திகதியிட்ட வரைபட இல. 672 இல் துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : நிமல் ராஜபக்ஷ உரிமை கோரும் காணியும் ; கிழக்கு: ஜவன் அப்பஹாமி உரிமைகோரும் காணியும்; தெற்கு : எல். மாரி பெர்ணாண்டோ மற்றும் எம். அலெக்ஸாண்டர் பெர்ணாண்டோ ஆகியோர் உரிமைகோரும் காணியும் ; மேற்கு : துண்டுகள் C மற்றும் B உம் எல்லைகளாகக் கொண்டு இருபது தசம் மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 20.3பே.) விஸ்தீரணமுடைய காணியும், அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் G227/66 இல் பதிவுசெய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் பல்லன்சேன கிராம அலுவலர் பிரிவின் பல்லன்சேன கிராமத்தில் அமைந்த "கதுருகஹவத்த , கஹட்டகஹவத்த மற்றும் கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. சுமுது டீ பெரேரா தயாரித்த 15.02.2017 ஆந் திகதியிட்ட வரைபட இல. 672 இல் துண்டு C என அடையாளமிட்ட (12 அடி அகலப்பாதை) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : துண்டு B உம் ; கிழக்கு : துண்டு A உம் ; தெற்கு: எம். அலெக்ஸாண்டர் பெர்ணாண்டோ மற்றும் எம். என். பெர்ணாண்டோ ஆகியோர் உரிமை கோரும் காணியும் ; மேற்கு : கர்பவாச தேவாலய வீதியும் எல்லைகளாகக் கொண்டு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணமுடையது.

மேற்குறிப்பிட்ட துண்டு C பின்வரும் காணியின் ஒரு மீளளவையும் உப பிரிவும் ஆகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளில் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் பல்லன்சேன கிராம அலுவலர் பிரிவின் பல்லன்சேன கிராமத்தில் அமைந்த "கதுருகஹவத்த, கஹட்டகஹவத்த மற்றும் கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பலேந்திரன் தயாரித்த 06.02.2010 ஆந் திகதியிட்ட வரைபட இல. 2010/3/16 இல் துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : நிமல் ராஜபக்ஷவின் காணியும் ; கிழக்கு: ஜவன் அப்புஹாமியின் காணியும்; தெற்கு : எல். மாரி பெர்ணாண்டோவின் காணியும் எம். அலெக்ஸாண்டர் பெர்ணாண்டோவின் காணியும், எம். என். பெர்ணாண்டோவின் காணியும்; மேற்கு : கர்பவாச தேவாலய வீதியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் ஒன்று தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (0ஏ. 1றூ. 1.7பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு 1 பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் பல்லன்சேன கிராம அலுவலர் பிரிவின் பல்லன்சேன கிராமத்தில் அமைந்த "கதுருகஹவத்த, கஹட்டகஹவத்த மற்றும் கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்

ஜே. சீ. பெர்ணாண்டோ தயாரித்த 02.05.1916 ஆந் திகதியிட்ட வரைபட இல. 2074P இல் துண்டு B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு A2 உம் ; கிழக்கு : மார்தா பெர்ணாண்டோவின் காணி ; தெற்கு : டபிள்யூ. கொடியானோ பொன்சேகாவின் காணியும் ; மேற்கு : தெவட்ட பாதையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பூச்சியம் தசம் எட்டு ஒன்று பேர்ச் (0ஏ. 1றூ. 0.81பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E637/203 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

யூ. எஸ். எஸ். பெர்ணாண்டோ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வாய்க்கால்.

9-954

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

நிரந்தர மேலதிகபற்று தொடர்பு இல. : 8816439

கொச்சிக்கடை, பல்லன்சேன வடக்கு, இல. 88/2 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மில்லாவ தந்திரிகே சுஜித பிரியந்த அப்புஹாமி மற்றும் திருமதி மதகமகே வஜிர பெர்ணான்டோ ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.09ஆந் திகதிய 2136 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.07.29ஆந் திகதி ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 1 ஆவது ஆதனத்தை 2019.11.28 ஆந் திகதி மு.ப.10.45 மணிக்கும் 2 ஆவது ஆதனத்தை 2019.11.28 ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் கட்டான பிரதேச சபை எல்லைகளில் வெலிஹேன வடக்கு 77 ஆம் குறியீட்டு இலக்க கிராம அலுவலர் பிரிவில் வெலிஹேன கிராமத்தில் அமைந்த "தவட்டகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. எஸ். டீ. பெரேரா தயாரித்த 2012.07.15 ஆந் திகதியிட்ட வரைபட இல. 426 இல் துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : ஜொசபின் சிவப்புள்ளேயின் காணியும்; கிழக்கு : சித்ரா பெர்ணாண்டோபுள்ளேயின் காணியும் ; தெற்கு: சீ. சிவபுள்ளேயின் காணியும் ; மேற்கு : துண்டு 2 மற்றும் 1 உம் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் H 140/05 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் பல்லன்சேன வடக்கு கிராம அலுவலர் பிரிவு குறியீட்டு இல. 76 இல் பல்லன்சேன வடக்கில் அமைந்த ''மொலவத்த'' என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா தயாரித்த 2006.12.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5755 இல் துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : துண்டு 4 உம் ; தென்கிழக்கு : பாருதொட்ட பாதையும் ; தென் மேற்கு : துண்டு 6 உம் ; வடமேற்கு: துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச் (0ஏ.0றூ. 2.15பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் E 966/214 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் கட்டான பிரதேச சபை எல்லைகளில் வெலிஹேன வடக்கு கிராம அலுவலர் பிரிவு குறியீட்டு இல. 77 இல் வெலிஹேன கிராமத்தில் அமைந்த "தவட்டகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. எஸ். டீ. பெரேரா தயாரித்த 2012.07.15 ஆந் திகதியிட்ட வரைபட இல. 426 இல் துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : ஏ. என். ஏ. மல்லிகாவின் காணியும், ஜொசபின் சிவபுள்ளேயின் காணியும் ; கிழக்கு : துண்டு 3 உம் ; தெற்கு : துண்டு 2 உம் ; மேற்கு : பிரதேச சபைப் பாதையும் எல்லைகளாகக் கொண்டு மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 3.50பே.) விஸ்தீரணமுடையது. பொதுவழிப் பாதையொன்றாக உபயோகிப்பதற்கு உரிமையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் H 140/06 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

யூ. எஸ். எஸ். பெர்ணாண்டோ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வாய்க்கால் கிளை.

9- 955

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. : 80736567

இல. 492, சுந்தரபொல வீதி, யந்தம்பலாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. குலமுன்னேஸ்வரம் ஆரச்சிலாகே சுமித் தர்மதாச மற்றும் திருமதி விக்ரமசிங்ஹ முதியன்சேலாகே கீதான் ஜலி ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.16ஆந் திகதிய 2137 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.08.05 ஆந் திகதி ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹாரா மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2019.11.07 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பற்று தேவமெத்த கோரளையில் வாரியபொல பிரதேச சபை எல்லைகளுள் வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில் வீரபொல கிராம அலுவலர் பிரிவில் வீரபொல கிராமத்தில் அமைந்த "வெரலுகஸ்பிட்டிய வத்த, வெரலுகஸ்பிட்டியே கொடெல்ல மற்றும் உடகூன்கங்கமுல வத்த" என அழைக்கும் காணி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. அத்தபற்று தயாரித்த 2014.12.07 ஆந் திகதியிட்ட வரைபட இல. 2014/409 இல் துண்டு 1 என விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு : சரத்குமார அமரசிங்ஹ உரிமை கோரும் காணியின் பாகமும் அதே காணியின் மீதிப் பாகமும் (வரைபட இல. 2013/90 இல் துண்டு 1) ; கிழக்கு: வரைபட இல. 2014/409 இல் 12 அடி அகலப்பாதை துண்டு 2 உம், அதே காணியின் மீதிப்பாகமும் ; தெற்கு : அதே காணியின் மீதிப்பாகமும் ; மேற்கு : சரத்குமார அமரசிங்ஹ உரிமை கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபது பேர்ச் (0ஏ. 1றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் வரைபட இல. 2014/409 இல் துண்டு 2 என அடையாளமிட்ட 12 அடி அகலப்பாதையை உபயோகிப்பதற்கான வழி உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் S16/113 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. எம். எஸ். துஷார,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
குருநாகல்.

9-956

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

கடன் வசதி தொடர்பு இல. : 81772745

உதுமீய, பிதுருவெல்ல, நேசர் பிரீஸ் , இல. 06 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு . ஒட்டுனு பற்றல முலச்சாரியலாகே சத்துர துஷ்மந்த குமார பொல்பிட்டிய ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.16ஆந் திகதிய 2137 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.08.02 ஆந் திகதி ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹாரா மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் முதலாவது ஆதனம் 2019.12.10 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கும், 2 ஆவது ஆதனம் மற்றும் 3 ஆவது ஆதனம் மு.ப. 11.30 மணிக்கும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு, பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 847 இல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த"வேபொடபில்லேவ" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமரத்ன தயாரித்த

2015.03.08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 26A/2015 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு : வரைபட இல. 2435 இல் துண்டு இல. 3 தற்சமயம் ஏ. ஏ. எஸ். அசேல பண்டாரவின் காணியும் ; கிழக்கு : துண்டு இல. 3 உம் ; தெற்கு: துண்டு இல. 2 உம் ; மேற்கு : சந்தகலயிலிருந்து பிதுருவேல்ல வரை பிரதான பாதையும் எல்லைகளாகக் கொண்டு பதினான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.4பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 26A/2015 இல் துண்டு இல. 10 என அடையாளமிட்ட வழியின் உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் V60/127 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு, பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 847 இல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த "வேபொடபில்லேவ" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமரத்ன தயாரித்த 2015.03.08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 26A/2015 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு : துண்டு இல. 4 உம் ; கிழக்கு : துண்டு இல. 10 உம் (10 அடி பிரவேசம்) ; தெற்கு : துண்டு இல. 10 உம் (15 அடி பிரவேசம்); மேற்கு : துண்டு இலக்கங்கள் 1 மற்றும் 2 உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15.3பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 26A/2015 இல் துண்டு இல. 10 என அடையாளமிட்ட பாதையின் உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் V60/128 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு, பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 847 இல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த "வீபொடபில்லேவ" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமரத்ன தயாரித்த 2015.03.08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 26A/2015 இல் விபரித்த துண்டு 4 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு: வரைபட இல. 5014 இல் துண்டு இல. 4, தற்சமயம் எம். ஆர். விஜேரத்னவின் காணியும் ; கிழக்கு : துண்டு இல. 5 உம், துண்டு இல. 10 (10 அடி பிரவேசம்) ; தெற்கு : துண்டு இல. 3 உம் ; மேற்கு: வரைபட இல. 2435 இல் துண்டு இல. 1, தற்சமயம் டீ. பீ. மார்கஸ் வீரக்கொடியின் காணியும் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 2435 இல் துண்டு 2 தற்சமயம் எச். ஏ. கே. பத்மலதாவின் காணியும் வரைபட இல. 2435 இல் துண்டு இல. 3 உம் தற்சமயம் ஏ. ஏ. எஸ். அசேல பண்டாரவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 26A/2015 இல் துண்டு இல. 10 என அடையாளமிட்ட வழியின் உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் V60/129 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) டீ. எம். சீ. என். திசாநாயக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மல்கடுவாவ கிளை.

9-964

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் வசதி தொடர்பு இல. : 3768398, 80586773, 80442114, 75384724, 75839122.

கல் அமுன, கிரிமெட்டிய, இல. 570, தங்கொல்ல அரிசி ஆலை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு .வக்கம கெதர பொடி அப்புஹாமி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.23ஆந் திகதிய 2138 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.08.08 ஆந் திகதி வியாழக்கிழமை "டெய்லி நியூஸ்" "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 182/3, 50/β, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2019.10.21ஆந் திகதி திங்கட்கிழமை பி.ப.1.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### முதலாவது அட்டவணை

வட மத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், லங்காபுர பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் சிங்ஹல பற்று மஹகிரிமெட்டியாவ கிராம அலுவலர் பிரிவு இல. 150 இல் கல்அமுன கிராமத்தில் அமைந்த "கொட இடம" என அழைக்கும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த F. C. P. Po. 126 இல் (வெளிக்களத்தாள் இல. 01) விபரித்த துண்டு இல. 128 என அடையாளமிட்ட காணித்துண்டு- வடக்கு: துண்டு இல. 127 உம் ; கிழக்கு : துண்டு இல. 129 உம்; தெற்கு : துண்டு இல. 158 உம் ; மேற்கு : துண்டு இல. 16 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் நான்கு பேர்ச் (1ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பொலநறுவை மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO/C/10/148 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W. A. பிரேமரத்ன தயாரித்த 2011.02.25 ஆந் திகதியிட்ட அண்மைய வரைபட இல. 11/11 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

மேற்குறிப்பிட்ட கல்அமுன கிராமத்தில் அமைந்த “கொட இடம” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W. A. பிரேமரத்ன தயாரித்த 2011.02.25 ஆந் திகதியிட்ட வரைபட இல. 11/ 11 இல் விபரித்த துண்டு இல. 1 என அடையாளமிட்ட காணித்துண்டு- வடக்கு : F. C. P. 126 இல் துண்டு இல. 127 உம்; கிழக்கு : F. C. P. 126 இல் துண்டு இல. 129 உம் ; தெற்கு : F. C. P. 126 இல் துண்டு இல. 158 உம் ; மேற்கு : F. C. P. 126 இல் துண்டு இல. 16 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் நான்கு பேர்ச் (1ஏ. 0றூ. 4பே.) அல்லது சைபர் தசம் நான்கு ஒன்று நான்கு எட்டு ஹெக்டயார் (ஹெக்டெயார் 0.4148) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

### இரண்டாவது அட்டவணை

ஒதுக்கங்கள் :

1. இக்காணியில் காணப்படும் அல்லது அதன் மேலான (இவ்வழங்கலின் விதிக்கமைய பெறுமதியான கற்கள் உட்பட) சகல கனிப்பொருட்களதும் உரிமையுடன் கனிப்பொருளை அகழ்வதற்கு, தேடுவதற்கு, வேலை செய்வதற்கு, எடுத்துச் செல்வதற்கு உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
2. உரிமையாளர்கள் பாதைக்கு வைத்திருக்கும் எந்தவொரு உரிமையும் மற்றும் இவ்வழங்கல் திகதியில் நடைமுறையில் வைத்திருக்கும் ஏனைய உழைப்புகளும் ஆகும்.

நிபந்தனைகள் :

1. இங்கு குறிப்பிட்ட உப பிரிவின் அலகைவிட விஸ்தீரணத்தில் குறிப்பாக 1 /4 ஏக்கர் மேட்டு நிலமும் வயல் நிலத்தில் ஏக்கர்/ ஹெக்டெயர்களுக்கு குறைந்த பிரிக்கப்பட்டதொரு பாகத்தை உரிமையாளர் விற்கலாகாது.
2. இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்குறைந்த பங்கைவிட வைத்திருப்பவையின் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்கலாகாது.
3. எந்தவொரு நபரும் இங்கு 01 ஆவது நிபந்தனையில் குறிப்பிட்ட உப பிரிவின் அலகைவிட விஸ்தீரணத்தில் குறைவான பிரிக்கப்பட்டதொரு பாகத்துக்கு உரிமையாளராக முடியாது.
4. எந்தவொரு நபரும் இங்கு 02 ஆவது நிபந்தனையில் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பங்கைவிட குறைவாக வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்கின் உரிமையாளராக முடியாது.
5. இதன் பின்பு காணித்துண்டு அல்லது அதன் எந்தவொரு பகுதிக்கு நீர்ப்பாசன வசதியளிக்க முடியுமாயின் அல்லது தற்போது நிர்மாணித்துள்ள நீர்ப்பாசன நிர்மாண வேலையின்போது அல்லது எதிர்காலத்தில் நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ள இருப்பின் உரிமையாளர் அந்த நீர்ப்பாசன வசதிகளை வழங்கக்கூடிய பிரதேசங்கள் சம்பந்தமாக நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் (453 ஆம் அத்தியாயம்) முன்னேற்பாடுகள் மற்றும் அதன் கீழான சட்டதிட்டங்களுக்கு இணங்க வேண்டும்.
6. உரிமையாளர் அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றிராவிடின் அல்லது சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றிராவிடின் இக்காணியில் அல்லது அதன் மேல் காணப்படும் எந்தவொரு கனிப்பொருட்களையும் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, பிரயோகிக்கவோ, விற்கவோ அகற்றவோ அல்லது முடியாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி யின்றி இதன் எந்தவொரு பாகத்தையோ அல்லது வைத்திருப்பவையோ வெளியே வழங்க முடியாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஆர். எம். பீ. குமார,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹிங்குரக்கொட ,
2019, செத்தெம்பர் 09.

9-965

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் வசதி தொடர்பு இல. : 77976114 மற்றும் 81850248.

கேகாலை, மீபிட்டிய, சேர் எட்வின் விஜயரத்ன மாவத்தை, இல. 25/5 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தும்பொல ரால்லே அநுர பண்டார ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.23ஆந் திகதிய 2138 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.08.08 ஆந் திகதி ‘‘தினமின’’, ‘‘தினகரன்’’ மற்றும் ‘‘டெய்லி நியூஸ்’’ ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2019.10.30 ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த மத்தி பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் கந்தே கோரலே மான்கடவல, இஹலவெவ துலானே

கிராம அலுவலர் பிரிவு இல. 313 இல் மான்கடவல கிராமத்தில் அமைந்த ''மான்கடவல கேலே'' என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. ரீ. கலகெதர தயாரித்த 2014.05.23 ஆந் திகதியிட்ட (16 மற்றும் 2013.08.26 ஆந் திகதி அளந்த) வரைபட இல. 3542 இல் விபரித்த துண்டு "A" என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு : வரைபட இல. 3339 இல் துண்டுகள் 5 மற்றும் 6 உம் ; கிழக்கு: பாதைக்கான ஒதுக்கமும் (RDA) உம் ; தெற்கு : வரைபட இல. 3339 இல் துண்டுகள் 10, 11 மற்றும் 12 உம் ; மேற்கு : T.P. 148011 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 3542 இன்படி மூன்று றூட் மூன்று தசம் இரண்டு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 3.20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் F03/ 231 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ரீ. எச். எஸ். தேதுணு,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கதுருவெல கிளை,
2019, செத்தெம்பர் 09.

9-966

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல. : 81440147, 75927846, 79071114, 80018344.

இரத்தினபுரி, குடாவ, ரத்கங்க சந்தி, இல. 162A என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.அபேசிங்ஹ ஆரச்சிகே சமிந்த மதுர தர்ஷன வீரசிறி என்பவர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.02ஆந் திகதிய 2135 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.07.22 ஆந் திகதி ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2019.11.28ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளை உடபற்று தெற்கில் இரத்தினபுரி பிரதேச சபை எல்லைகள் இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவில் குடாவ கிராம அலுவலர் பிரிவில் குடாவ கிராமத்தில் அமைந்த தெகல்பனேஹேன (பாகம்) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். பீ. எஸ். ராஜபக்ஷ தயாரித்த 2004, செத்தெம்பர் 02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1607 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1607 இல் துண்டு 1 உம் ; கிழக்கு: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1607 இல் துண்டு 10 உம் (பாதை) ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைட இல. 1607 இல் துண்டு 4 உம் ; மேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1607 இல் துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று ஏழு ஒன்பது ஹெக்டெயர்கள் (0.0379 ஹெக்டெயர்) விஸ்தீரணமுடைய காணியும், அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் K23/109 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பி. வீ. சீ. ஜீ. பீ. ரணசிங்ஹ,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
இரத்தினபுரி,
2019, ஓகத்து 12.

9- 967

---

LE/RE/208

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி ( HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

பழைய கடன் இலக்கம் (அதன் புதிய கடன் இலக்கம்) :
2600000347 (112500000085) மற்றும்
2607200038 (112725000032)

கடனாளியின் முழுப் பெயர் : நதீரா விதுமணி பொல்கம்பொல மற்றும் கருணாரத்னலாகே சமந்த குமார

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் ( 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2018.09. 14 ஆம் திகதி 2089 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2018.09.07 ஆம் திகதிய ''லங்காதீப'' , ''தினக்குரல்'' மற்றும் '' த ஐலண்ட்'' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகானவீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2019.10.22ஆந் திகதி பி.ப. 3.00 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

இலக்கம் 3305 மற்றும் 2922 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரத்தின்படி, தொண்ணூற்று நான்கு இலட்சத்து நாற்பத்து ஐயாயிரத்து தொளாயிரத்து அறுபத்து நான்கு ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 94,45,964.34) 2018.06.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. முதலாவது கடன் தொகைக்காக 2600000347 (112500000085)

3305 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான ஐம்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா அறுபத்து ஒன்பது சதத்தினையும் (ரூபா 59,34,199.69) 2018.06.30 ஆந் திகதி வரை நிலுவையாகவுள்ள மூன்று இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து நூற்று எண்பத்து எட்டு ரூபா நாற்பத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 3,83,188.42) இதன்படி முழுத் தொகையான அறுபத்து மூன்று இலட்சத்து பதினேழாயிரத்து முந்நூற்று எண்பத்து எட்டு ரூபா பதினொரு சதத்தினையும் (ரூபா 63,17,388.11) அறவீடு செய்வதற்கும்.

இரண்டாவது கடன் தொகைக்காக 2607200038 (112725000032)

2922 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்து ஆறு சதத்தினையும் (ரூபா 27,79,357.26) 2018.06.30 ஆந் திகதி வரை நிலுவையாகவுள்ள மூன்று இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று பதினெட்டு ரூபா தொண்ணூற்று ஏழு சதத்தினையும் (ரூபா 3,49,218.97) இதன்படி முழுத் தொகை யான முப்பத்து ஒரு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபத்து ஆறு ரூபா இருபத்து மூன்று சதத்தினையும் (ரூபா 31,28,576.23) கடன்களின் மொத்த கூட்டுத் தொகை தொண்ணூற்று நான்கு இலட்சத்து நாற்பத்து ஐயாயிரத்து தொளாயிரத்து அறுபத்து நான்கு ரூபா முப்பத்து நான்கு சதத்தினையும் (ரூபா 94,45,964.34) அறவீடு செய்வதற்கும்,

2. குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான ஐம்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா அறுபத்து ஒன்பது (ரூபா 59,34,199.69) சதத்திற்காக அறவிட வேண்டிய 13.00% வீத வருடாந்த வட்டியினையும், இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இருபத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்து ஆறு (ரூபா 27,79,357.26) சதத்திற்காக அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும், 2018.07.01 ஆந் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

3. 2018.07.01 ஆந் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட மொத்த நிலுவைத் தொகையான ஏழு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நாநூற்று ஏழு ரூபா முப்பத்து ஒன்பது சதத்திற்காக (ரூபா 7,32,407.39) மாதாந்தம் 2.00% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

4. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

பழைய கடன் இலக்கம் (அதன் புதிய கடன் இலக்கம்): 2600000347 (112500000085) மற்றும் 2607200038 (112725000032)

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், ரைகம் கோரளையில் கும்புக்கே பத்துவவில் ஹொரண பிரதேச செயலகப் பிரிவில், மற்றும் ஹொரண பிரதேசபை எல்லையில் (கனன்வில உப- அலுவலகம்), இலக்கம் 606B - கொடிகமுவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கொடிகமுவ கிராமத்தில் அமைந்துள்ள பாலுகனத்த மற்றும் மில்லகஹவத்த எனப்படும் காணிக்கு 2009.06.13 ஆந் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் எல். சந்ரரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1638 ஆம் இலக்க காணிவரை படத்தின்படி, A2 என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : A1 என்ற இலக்க காணித்துண்டும் பாதையும் ; கிழக்கு : 482 என்ற இலக்க காணி வரைபடத்தின்படி B என்ற இலக்க காணித்துண்டும் ; தெற்கு : எச். டி. ஜீ. பெரேரா என்பவருக்கும் மற்றும் ஏனையவர்களுக்கும் சொந்தமான ஈரியகஹதெனியவும் மற்றும் ; மேற்கு : A1 என்ற இலக்க காணித்துண்டும் மற்றும் காமினி மல்வென்ன என்ற

அனுமதிபெற்ற நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட காணி வரைபட இலக்கம் 1500 இன் 7 மற்றும் 8 ஆம் இலக்க காணித்துண்டுகளும் (10அடி அகலப் பாதை) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு மூன்று றூட் பன்னிரெண்டு பேர்ச்சுகளாகும் (0ஏ. 3றூ. 12பே.) அல்லது பூச்சியம் தசம் மூன்று மூன்று மூன்று ஒன்பது ஹெக்டயார் (ஹெக். 0.3339) இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்துடன் ஹொரண காணிப்பதிவு அலுவலகத்தில் A283/45 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

இ. வீ. அ. நி. கூ. வங்கி,
தே. வீ. அபி. அ. சபை கட்டிடம்,
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த.பெ.இல. 2085,
கொழும்பு - 02,
2019, செத்தெம்பர் 17.

9 - 1003

---

LE/RE/208

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி ( HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

கடன் இலக்கம் : 114730000002

கடனாளியின் முழுப் பெயர் : ரணவீர களுஆரச்சி முஹாம்திரம்லாகே சமில் ரந்திக்க ரணவீர மற்றும் தொடம்வலகே தேதுனு நிலங்கா

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் ( 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2019.05. 17 ஆந் திகதி 2124 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2019.05.10 ஆந்திகதிய ‘‘லங்காதீப’’ , ‘‘தினக்குரல்’’ மற்றும் ‘‘ த ஐலண்ட்’’ ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகானவீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2019.10.22ஆந் திகதி மு.ப. 10.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

1942 ஆம் இலக்க அடகுப்பத்திரத்தின்படி, நான்கு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இரண்டு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூபா 4,64,98,002.53) 2019.03.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. 1942 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நான்கு கோடியே இருபத்தைந்து இலட்சத்து பதினேழாயிரத்து எழுபத்தேழு ரூபா ஐம்பத்தொன்பது சதத்தினையும் (ரூபா 4,25,17,077.59), 2019.03.31 ஆந்திகதி வரையிலான நிலுவையாக முப்பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரத்து தொளாயிரத்து இருபத்து நான்கு ரூபா தொண்ணூற்று நான்கு சதத்தினையும் (ரூபா 39,80,924.94) இதன்படி மொத்தமாக நாலு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இரண்டு ரூபா ஐம்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 4,64,98,002.53) அறவீடு செய்வதற்கும்,

2. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நான்கு கோடியே இருபத்தைந்து இலட்சத்து பதினேழாயிரத்து எழுபத்தேழு ரூபா ஐம்பத்தொன்பது சதத்திற்காக (ரூபா 4,25,17,077.59), அறவீடு செய்ய வேண்டிய 17.50% வீதமான வருடாந்த வட்டியினையும், 2019.04.01 ஆந் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

3. 2019.04.01 ஆந் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட முழு நிலுவைத் தொகையான முப்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தையாயிரத்து அறுநூற்றி இருபத்தி நான்கு ரூபா தொண்ணூற்று நான்கு சதத்திற்காக (ரூபா 39,75,624.94) மாதாந்தம் 2.00 வீத தாமத வட்டி ஒன்றினை ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

4.1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதற்காகும்.

கடன் இலக்கம் : 114730000002

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் தெற்கு பிட்டிகல் கோரளையில், மெதபலாத்தையில் நாத்தாண்டிய பிரதேச சபை எல்லை (யட்டகலன்பத்துவ உப அலுவலக எல்லையில்) மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 510A முத்துகட்டுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில், முத்துகட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள நீர்கொழும்பு பாதையில் வரிமதிப்பீட்டிலக்கம் 501, 501/1, 501/2, 501/3, 501/4, 501A, 501A 1/1, 501/B 501C மற்றும் 501D என்ற முத்துகட்டுவயாய என்ற காணிக்கு 2017, ஒற்றோபர் 30 ஆந் திகதி அனுமதி பெற்ற நில அளவையாளர் எம். ஜே. கோமஸ் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 16944 என்ற இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : ஜே. கே. துலீப கெலும் சிந்தக பெரேராவின் காணித்துண்டும்; கிழக்கு : ஓடையும், மல்லவாரச்சிகே ஜயசேன என்பவரின் காணியும் ; தெற்கு: முன்னர் அலோசியஸ் அப்புஹாமி என்பவரினதும் தற்பொழுது பிள்ளைகள் மத்தியில் பிரிக்கப்பட்டுள்ள காணியும் மற்றும் மல்லவாரச்சிகே ஜயசேன என்பவரினதும் காணியும் மற்றும் மேற்கு: மல்லவாரச்சிகே ஜயசேன என்பவரின் காணியும் மற்றும் சிலாபத்திலிருந்து கொழும்பு வரையிலான வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் மூன்று றூட் பத்தொன்பது பேர்ச்சுகளாகும். (0ஏ. 3றூ. 19பே.) அல்லது பூச்சியம் தசம் மூன்று ஐந்து ஒன்று ஆறு ஹெக்டயார்களாகும். (0.3516 ஹெக்.) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் மற்றும் மேற்குறிப்பிட்ட 16944 என்ற இலக்க காணிவரைபடத்தின்படி மாரவில காணிப் பதிவு அலுவலகத்தில் J 248/ 27 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட 01 ஆம் இலக்க காணித்துண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் ஒன்றிணைப்பாகும்.

1. மேற்குறிப்பிட்ட எல்லையில் முத்துகட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள முத்துகட்டுவயாய என்ற காணிக்கு 1961.09.07 ஆந் திகதி வீ. எப்ஃ. வர்ணகுலசூரிய என்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 6174 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : கே.ஜே. பிரனாந்து என்பவரின் 15 ஆம் இலக்க காணித்துண்டும்; கிழக்கு : 6174 ஆம் இலக்க காணி வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கு : 6174 ஆம் இலக்க காணிவரைபடத்தின் 2 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கு: 2 ஆம் இலக்க காணித்துண்டும் பிரதான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் இருபத்து ஏழு பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 27பே.) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் மாரவில காணிப் பதிவு அலுவலகத்தில் J 23/ 153 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2. மேற்குறிப்பிட்ட எல்லையில் முத்துகட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள முத்துகட்டுவயாய என்ற காணிக்கு 1961.09.07 ஆந் திகதி வீ. எப்ஃ. வர்ணகுலசூரிய என்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 6174 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டின் (ஒரு பகுதி) எல்லைகளாக - வடக்கு : என். ஜயகொடி பிரணாந்து என்பவரின் 15 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கு : சீ. எச். த சொய்சா என்பவரின் கீனிகலேவத்த என்ற காணித்துண்டும் மாட்டுவண்டி பாதையும்; தெற்கு : 3 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கு : பிரதான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் மூன்று றூட் ஒன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகளாகும். (0ஏ. 3றூ. 1.50பே.) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் மாரவில காணிப் பதிவு அலுவலகத்தில் J 211/110 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

3. மேற்குறிப்பிட்ட எல்லையினுள் முத்துகட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள முத்துகட்டுவயாய என்ற காணிக்கு 1961.09.07 ஆந் திகதி ஏ.எம்.பெரேரா என்ற அனுமதிபெற்ற நில அளவை யாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 5882 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி D என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : அதே காணி வரைபடத்தின் C என்ற இலக்க காணித்துண்டும் ; கிழக்கு: பழைய வீதியும் ; தெற்கு : ஜே. ஏ அரனோலிஸ் அப்புஹாமி மற்றும் டனியல் ஜயவர்தன என்பவரின் வாரிசுகள் உரிமை கோரும் 14 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கு: சிலாபம்-கொழும்பு பிரதான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் எட்டு தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 8.60பே.) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் மாரவில காணிப் பதிவு அலுவலகத்தில் J 239/ 100 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. டபிள்யூ. டி. எஸ். சீ. பெரேரா என்பவரினால் 2018.02.28 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 1942 ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணை பரீட்சிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

பொது முகாமையாளர்.

இ. வீ. அ. நி. கூ. வங்கி,
தே. வீ. அபி. அ. சபை கட்டிடம்,
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
2019, செத்தெம்பர் 17.

9- 1004

**டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ**
**(முன்னர் டிஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)**
**பெறுமதிமிக்க சொத்து**
**ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*1199 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் ஈடு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்.*

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, மெத பற்று, கம்பஹா மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்கு உட்பட்ட, அளுத்கம கிழக்கு, கிராம அலுவலர் பிரிவு 225 , கம்பஹா, அலுத்கமயில் அமைந்துள்ள, இல. 107, விஜித மாவத்தை என்ற முகவரியைச் சேர்ந்த "பண்டாரவத்த எஸ்டேட்" என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஆர்.கே. பி. ரணவீர அவர்களால் வரையப்பட்ட 2008 , செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட 1114 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக் கப்பட்டதுமான காணித்துண்டு.*

*காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 22.24பே.*
*அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக*

*ஏ. லென்டன் சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட , 1989, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட 284 ஆம் இலக்க காணி உறுதியின் மூலம் உரிமம் பெறப்பட்ட மற்றும் உரித்தாக்கப்பட்ட 114 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி ஒதுக்கீட்டின் மூலமாகவும் சமாந்தரமாகவும் பயன்படுத்தும் உரிமையுடன்.*

*பிரசித்த நொத்தாரிசு ருவன்தி பொன்சேகா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2017 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியிடப்பட்ட 1199 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் "கயான் கோல்ட் ஹவுஸ்" எனும் பெயரில் வியாபாரத்தை நடாத்தி வரும் ராஜசேகர வடுகே நெஸ்லி ரஞ்சித் எனும் நெஸ்லி ரஞ்சித் ராஜசேகர, லொக்கு ராஜசேகர வடுகே லால் ஆனந்த மற்றும் லொக்கு ராஜசேகர வடுகே நிஹால் பிரியந்த ராஜசேகர ( இதன் பின்னர் பங்குடமையாளர்கள் என அழைக்கப்படும் ) ஆகியோரால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

*டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2019ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலத்தில் ஏல விற்பனைக்கு விடப்படும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.***- *ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.*

*(1) கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 % விற்பனை வரி 1%(ஒரு சதவீதம்);*
*(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;*
*(4) மொத்த விளம்பரச் செலவான ரூ.110.000.00;*
*(5) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1000;*
*(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.00 ;*

*கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசிசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.*

*மேலதிக விபரங்களுக்கு 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ யின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.*

*'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'*

*ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*'ஒரே தேசம், ஒரே ஏல விற்னையாளர்,*
*127வருட கால மகோன்னத சேவை அனுபவம்.'*

*தலைமை அலுவலகம் :*
*24, டொரிங்டன் வீதி, கண்டி*
*தொலைபேசி : 081-2227593*
*தொலைபேசி/பெக்ஸ்: 081-2224371*
*மின்னஞ்சல்:* schokmankandy@sltnet.lk

*நகர அலுவலகம்:*
*6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8*
*தொலைபேசி: 011-2671467, 011-2671468*
*தொலைபேசி/பெக்ஸ்: 011-2671469*
*மின்னஞ்சல்:* schokman@samera1892.com

*இணைய தளம்:* www.sandslanka.com

9 - 799

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - நீர்கொழும்பு கிளை**

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த றொனி கொட்டேஜ் (பிரைவேட்) லிமிட்டெட் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி.எம்.எம். பர்னாந்துவின் 2015.02.16 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 4883 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மிகுதி முற்பணம் வட்டியும் ஏலதாரரின் சொல்லப்பட்ட பணத்தொகைகளை பெற்றுக் கொள்ள ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,**

இக் கீழ் விபரிக்கப்பட்ட காணிகளை 2019, ஒற்றோபர் மாதம் 22ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

நீர்கொழும்பு பதிவு எல்லையில் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 75A பலன்கந்துர கிராம அலுவலர் எல்லையில் துணகாபத்து அளுத்குரு கோரளையில் நீர்கொழும்பு நகர சபை எல்லையில் பலன்கதுர கிராமத்தில் உள்ள கும்புக்காவத்த மற்றும் கோண்காவத்த காணிக்கு நிலஅளவையாளர் பாலந்திரன் 2014.09.13 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2014/01/209 இல் காண்பிக்கப்பட்ட லொட் A.

இக்காணியின் விஸ்தீரணம் : 0ஏ.01றூ.12.85 பே. இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

**மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2019.07.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.13ஆந் திகதிய மவ்பிம, டெயிலி மிரர் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- தலவுவகொட்டுவ சந்தியில் இருந்து சிலாபம்- கொழும்பு பிரதான ரோட்டில் நீர்கொழும்பு பக்கம் 140 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள சென். ஆனாஸ் ரோட்டில் 1.1 கி.மீற்றர் சென்று இடது பக்கம் பலன்கதுர சேர்ச் அடைய முன்பு 100 மீற்றர் சென்று இடது பக்கம் காணி உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);

(4) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் கொடுக்கப்பட்ட 10% திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

**வேறு விபரங்களுக்கு.**- "சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661828, 011- 2661866.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice@sltnet.lk

9- 882

---

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - ஹொரண கிளை**

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த திசாநாயக்க லியனகே ஹேமகுமார திசாநாயக்க மற்றும் ஏரபொல கமகே இமதிரி தீபிகா ஏரபொல ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக ஹொரண பிரசித்த நொத்தாரிசு கே. கன்னங்கரவின் 2015.07.24 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 5485 மற்றும் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பி.வி.என். டபிள்யூ. பெரேராவின் 2017.11.06 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 5776 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மிகுதி முற்பணம் வட்டியும் எலதாரரின் சொல்லப்பட்ட பணத்தொகைகளைப் பெற்றுக் கொள்ள ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாத்தின் படி,**

இக் கீழ் விபரிக்கப்பட்ட காணிகளை 2019, ஒற்றோபர் மாதம் 25ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன, பாணந்துறை தல்பிட்டி தெபெத்த பாணந்துறை மாவட்டச் செயலாளர் எல்லையில், பாணந்துறை நகர சபை எல்லையில் இலக்கம் 682/A குரப்புமுல்ல கிராம அலுவலர் தொகுதியில் உடாமுல்ல பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள குண்காவத்த மற்றும் காட்டகாவத்த மற்றும் மில்லகாவத்த காணிக்கு நிலஅளவையாளர் பி. ஐ.டி. பர்னாந்துவின் 1993.11.22 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 4182 இல் காண்பிக்கப்பட்ட லொட் 13.

இக்காணியின் விஸ்தீரணம் : 0ஏ.0றூ.10பே. இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2019.08.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.20ஆந் திகதிய மவ்பிம, டெயிலி மிரர் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- ஹொரண நகரத்தில் இருந்து பாணந்துறை ரோட்டில் 18 கி.மீற்றர் பாணந்துறை ரவுன்டபவுட் வலது பக்கம் கொழும்பு ரோட் இதில் 01 கிலோ மீற்றர் பாணந்துறை ஆஸ்பத்திரி சந்தி வரை சென்று இரன ரோட்டில் 400 மீற்றர் சென்று வலது பக்கம் மாலமுல்ல ரோட்டில் 350 மீற்றர் சென்று இடது பக்கம் உள்ள ரனவிரு எம். பர்னாந்து மாவத்தை இதில் 80 மீற்றர் சென்ற பிறகு இக் காணி இடது பக்கம் உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் கொடுக்கப்பட்ட 10% திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணியை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

**வேறு விபரங்களுக்கு.**- "சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661828, 011- 2661866.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice@sltnet.lk

9- 883

---

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - ஹொரண கிளை**

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

**கடன் எடுத்த லொகு பொன்னம்பெருமகே ஏரங்க ஜயசான் குணவர்தன ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பி. என். ஏகநாயக்கவின் 2016.03.17 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 12312 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மிகுதி முற்பணம் வட்டியும் எலதாரரின் சொல்லப்பட்ட பணத்தொகையை பெற்றுக் கொள்ள ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாத்தின் படி,**

இக் கீழ் விபரிக்கப்பட்ட காணியை 2019, ஒற்றோபர் மாதம் 15ஆந் திகதி காலை 10.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மாவட்டச் செயலாளர் எல்லையில் இலக்கம் 271, யக்கல வடக்கு கிராம அலுவலர் எல்லையில், மெதபத்து சியன கோரளையில், கம்பஹா நகர சபை எல்லையில், யக்கல கிராமத்தில் உள்ள கட்டிட இலக்கம் 89/29 ரதவான ரோட் (தெற்கு), இல் உள்ள தம்பவ எஸ்டேட் என்ற தற்சமயம் சொல்லப்பட்ட தம்புவகெல, நிக்காலந்த காணிக்கு நில அளவையாளர் கே. கே. ஏ. எஸ். பத்மினி 2016.02.24 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 12983 இல் காண்பிக்கப்பட்ட லொட்A.

இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.10பே. இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2019.08.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.19ஆந் திகதிய மவ்பிம, டெயிலி மிரர் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- யக்கல சந்தியில் இருந்து ரதவான ரோட்டில் 600 மீற்றர் 20 அடி ரோட் இடது பக்கம் எசல கட்டிடம் 3 ஆவது லேன் தாண்டி கடைசியாக வலதுபக்கம் உள்ள ரோட்டில் 100 மீற்றர் சென்று காணி வலது பக்கம் உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் 10% முற்பணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணியை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

**வேறு விபரங்களுக்கு.**– "சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661828, 011- 2661866.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice@sltnet.lk

9- 884

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (வெளிநாட்டு இஸ்லாமிக் பாங்கிங் யூனிட் கிளை)

பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையில், திம்பிரிகஸ்யாய மாவட்ட செயலாளர் எல்லையில் கொள்ளுப்பிட்டிய கிராம அலுவலர் தொகுதியில் கட்டிட இலக்கம் 29/1, 10 ஆவது லேன் , கொள்ளுப்பிட்டிய ரோட் இல் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். ராசப்பாவின் (சரியான திகதி 2008.08.23) 2008.09.09 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 446/2008 இல் காண்பிக்கப்பட்ட லொட் 4A இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ.0றூ.12.70பே.) இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.

மற்றும் நிலஅளவையாளர் எம். டி. சமீர் இன் வரைபட இலக்கம் 1153 இல் காண்பிக்கப்பட்ட லொட் 06 பாதைக்கு பாவிக்கும் உரிமையுடனும் .

கடன் எடுத்த கொழும்பு -03, 16 ஆவது லேன், இலக்கம் 14 பதிவு அலுவலகத்தில் உள்ள இலங்கைக் கம்பனி சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட ஹில் டொப் குளோபல் ( பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடு வைத்த முஹம்மட் சகீர் ஜலால்டீன் மற்றும் முஹம்மட் அன்வர் சதாத் ஜலால்டீன் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்கள்.

மேற்சொல்லப்பட்ட காணியை 2019 ,ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**– 2018.03.16 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.04.24 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல் " பத்திரிகைகளையும் மேலும் ஏலவிற்பனை பற்றிய அறிவித்தலுக்காக 2019.09.27 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2019.09.30 ஆந் திகதியுடைய "திவயின", "டெய்லி நிவுஸ்" மற்றும் "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்.**– கொழும்பு நகர மத்தியிலிருந்து காலி ரோட்டில் கொள்ளுப்பிட்டிய சந்தி தாண்டி 300 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள ஸ்கோபீல்ட் (Schofield Place) பிளேஸ், இதில் 150 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள 10 ஆவது லேன் இதில் 30 மீற்றர் சென்று இடது பக்கம் இரண்டாவது இலக்கம் 29/1 இல் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**– உத்தேசக் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;

(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;

(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) VAT வரி.

(8) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது பழைய சோனக வீதிக் கிளையில் செலுத்த வேண்டும்.;

**வேறு விபரங்களுக்காக.**– முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இஸ்லாமிக் பாங்கிங் யூனிட், இல.21, சேர் ராசிக் பரீட் மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி இல. : 011- 2486000
தொலைநகல் இல. : 011- 2347717

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி /தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice84@gmail.com

9- 885

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பழைய சோனக வீதி கிளை)

பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

**1 ஆவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையில், கொழும்பு மாவட்டச் செயலாளர் எல்லையில் லுணுபொக்குன கிராம அலுவலர் எல்லையில் மோதர, இலக்கம் 150 இன் கீழ் சென். அந்திரிவுஸ் பிளேஸ் கட்டிடத்தில் உள்ள நிலஅளவையாளர் கே. எப். எஸ். குணசேகரவின் 2016.08.11 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 911 இல் காண்பிக்கப்பட்ட லொட்01. இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ.0றூ.8.1பே.) இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.

**2 ஆவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையில், கொழும்பு மாவட்டச் செயலாளர் தொகுதியில் மோதர கிராம அலுவலர் தொகுதியில் , வாட் இலக்கம் 05, லுணுபொக்குன கட்டிட இலக்கம் 138 இன் கீழ் சென் அந்திரிவுஸ் பிளேஸ் கட்டிடத்தில் உள்ள நிலஅளவையாளர் கே. ஜி. சி. குலவன்சவின் 2016.07.04 ஆந் திகதியுடைய வபைட இலக்கம் 547 இல் காண்பிக்கப்பட்ட லொட் A. இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ.0றூ.19.70பே.) இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.

1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை கடன் எடுத்த நற்குணம் அந்தோனி சக்கரியாஸ் மற்றும் சர்மிளா எபனீசர் அந்தோனி மற்றும் காணியை ஈடு வைத்த நட்குணம் அந்தோனி சக்கரயாஸ் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்கள்.

மேற்சொல்லப்பட்ட காணிகளை

**1 ஆவது அட்டவணை** - 2019 ,ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி காலை 10.30 மணிக்கும்

**2 ஆவது அட்டவணை** - 2019 ,ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி காலை 11.30 மணிக்கும் என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2019.07.26 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "திவயின", "டெய்லிநியுஸ்" மற்றும் "வீரகேசரி " பத்திரிகைகளையும் மற்றும் 2019.09.27ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2019.10.01 ஆந் திகதியுடைய "திவயின", "டெய்லி நிவுஸ்" மற்றும் "வீரகேசரி"ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்**.- **1 ஆவது அட்டவணை**: கொழும்பு - காண் கடிகாரம் டவர் சந்தியில் இருந்து என். எச்.எம்.அப்துல் காதர் ரோட், சீ. பீச் ரோட் சென் அந்தோனி மாவத்தை, சிரிமத் இராமநாதன் மாவத்தை ஊடாக கீழ் சென். அந்திரிவுஸ் பிளேஸ் ஐ அடைய முடியும். கட்டிட இலக்கம் 150 ரோட் முன்பு உள்ளது.

**2 ஆவது அட்டவணை**: கொழும்பு - காண் கடிகாரம் டவர் சந்தியில் இருந்து சென் அந்தோனி மாவத்தை, சேர்.பி . இராமநாதன் மாவத்தை , அளுத் மாவத்தை ரோட் இதில் 2.5 கிலோ மீற்றர் மோதர பக்கம் சென்று லொவர் சென். அந்திரிவுஸ் பிளேஸ் இடது பக்கம் உள்ளது. இந்த ரோட்டில் 200 மீற்றர் சென்று இலக்கம் 138 மற்றும் 146 லெவா சென் அந்திரிவுஸ் பிளேஸ் காண முடியும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;

(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;

(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) VAT வரி.

(8) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது பழைய சோனக வீதிக் கிளையில் செலுத்த வேண்டும்.

**வேறு விபரங்களுக்காக**.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல.442/ A, பழைய சோனகத் தெரு, கொழும்பு 11.

தொலைபேசி இல. : 011- 234554,
011- 2345595
தொலைநகல் இல.: 011- 2345575.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி : 011-2445393, 011-2396520.
தொலைபேசி/தொலைநகல் இல.:0112445393.

மின்னஞ்சல்: senaservice84@gmail.com

9- 886

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - கம்பஹா கிளை**

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த , சி.எஸ். அபேசிங்க (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த கரட்டகொல்ல கெதர அபேசிங்க முதியான்சலாகே சந்தன சன்ஜீவ அபேசிங்க ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசு என். ஏகநாயக்கவின் 2017.04.03 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 12992 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மிகுதி முற்பணம் வட்டியும் ஏலதாரரின் சொல்லப்பட்ட பணத்தொகைகளைப் பெற்றுக் கொள்ள, ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாத்தின் படி,**

இக் கீழ் விபரிக்கப்பட்ட காணிகளை 2019, ஒற்றோபர் மாதம் 15ஆந் திகதி பி.ப. 12.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கம்பஹா மாவட்டச் செயலாளர் தொகுதியில் இலக்கம் 227, கெசெல்வதுகொட கிராம அலுவலர் எல்லையில் மெதபத்து சியன கோரளையில் , கம்பஹா நகர சபை எல்லையில் கெல்வத்துகொட கிராமத்தில் உள்ள யக்கல எஸ்டேட் காணிக்கு நில அளவையாளர் கே.கே.ஏ.எஸ். பத்மினி 2016.06.29 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 13285 இல் காண்பிக்கப்பட்ட லொட் A.

இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.25.10பே. இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2019.08.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.19ஆந் திகதிய மவ்பிம , டெயிலி மிரர் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**-இக்காணிக்கு யக்கல இருந்து கம்பஹா ரோட்டில் 300 மீற்றர் வலது பக்கம் 16 (கட்டை) கி.மீற்றர் பிரதான ரோட்டில் இக்காணி 2 ஆவது காணித்துண்டு இடது பக்கம் மூன்று மாடிக் கட்டிடம் தற்சமயம் கட்டப்பட்டுக் கொண்டுள்ளது. இது பிரசித்தி பெற்ற நோபல் கிட்ஸ் இன்டநெஷனல் பீரிஸ்குல டேகாயிர் சென்டர்

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2 1/2 %;
(4) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் 10% முற்பணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் கொண்டது.

**வேறு விபரங்களுக்கு.**- "சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661828, 011- 2661866.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice@sltnet.lk

9- 887

---

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - மட்டக்களப்பு கிளை**
**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்*

ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வாஸ்ஹரன் டிரேடர்ஸ் இன் பங்காளிகளான ஆறுமுகம் தங்கராஸ் மற்றும் தங்கராஸ் புஷ்பலதா ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**1 ஆம் விற்பனை**

**2019.10.18 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு**

**ஆதனத்தின் விபரம்**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட பெருந்திரு வட்டார இல. 07 பிரதான வீதியில் அமைந்துள்ள வரிப்பண இல. 212 எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் R. பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1409 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1

